**மேற்கண்ட பிரச்சனைகளால்,**

a. குடி நோயாளி பாதிப்படைகிறார்.

b. இவரின் மனைவி, குழந்தைகள் மனரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூகரீதியாக பாதிக்கப்படுகிறார்கள்.

c. மனைவி மற்றும் குடும்பத்தினர் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.



d. குடி நோயாளிகளின் குழந்தைகளும், பிற்காலத்தில் குடிக்கு அடிமையாகலாம்.

e. குடும்பம் சீர்கெடுகிறது.

f. சமுதாயம் பாழடைகிறது.

g. குடி மற்றும் போதைப் பொருட்களைப் பெற தேவையான பணத்தைப் பெற சட்டத்திற்கு புறம்பான வழிகளில் (கொள்ளை, கொலை, வழிபறி போன்ற செயல்களில்) குடி நோயாளிகள் ஈடுபடக்கூடும்.

h. நம் நாடே பொருளாதார ரீதியாக, சமுகரீதியாக பண்பாடு ரீதியாக பாதிப்படைகிறது.

**மேற்கண்ட சீர்குலைவுகளை ஏற்படுத்தும் குடி மற்றும் போதைப் பொருட்களை நாம் உபயோகித்து அடிமையாக வேண்டுமா? சிந்திப்பீர்களாக !**

**எனவே, இன்றே கீழ்க்கண்ட உறுதி மொழியை நாம் எடுத்துக் கொண்டு, அதனை கடைபிடிப்போம்.**

1. குடி மற்றும்போதைப் பொருட்களை நான் உபயோகிக்க மாட்டேன்.
2. குடி மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர் களிடமும், அவர்களது குடும்பத்தினரிடமும் பேசி, பாதிக்கப் பட்டவர்களை, மனநல மருத்துவரிடம் குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையான நிலையிலிருந்து விடுபட, சிகிச்சை எடுத்துக் கொள்ளச் சொல்லி ஆலோசனை கூறுவேன்.
3. இளந்தலைமுறையினரிடம், குடி மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துச்சொல்லி, அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவேன்.

# STATE MENTAL HEALTH AUTHORITY

## Tamil Nadu

# மாநில மனநல ஆணையம்

## தமிழ்நாடு

# ALCOHOL / DRUB DEPENDENCE

# குடி மற்றும் போதை நோய்


*Written by*

**Dr. S. RAJARATHINAM, MD, DPM;**

*Professor of Psychiatry*
*Kilpauk Medical College & Hospital, Chennai - 600 010.*
*Secretary, State Mental Health Authority*

*எழுதியவர் :*

**Dr. ச. ராஜரெத்தினம், MD, DPM;**

**பேராசிரியர்–மனநலப்பிரிவு, கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை. சென்னை – 600 010.**
**செயலாளர், தமிழ்நாடு மாநில மனநல ஆணையம்**

இந்தியாவில் போதைப் பொருட்களை உபயோகப்படுத்துவோர் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு பெருகி வருகிறது.

**ஆல்கஹால் – 20% ; கஞ்சா – 3%; ஹெராயின் – 0.2% ; ஓபியம்– 0.5% ; இதர போதை பொருட்கள் –1%**

மனிதர்களைத் தாக்கும் பலவிதமான நோய்களில், மிகவும் மோசமான வியாதி – போதைப் பொருட்களுக்கு அடிமையாவது. இப்பழக்கத்திற்குள்ளானவர்கள், வாழ்க்கையின் எல்லா அங்கங்களிலும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

**1. உடல் நல பாதிப்புகள் :–**

குடி மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதால் உடலில் உள்ள எல்லா உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன.

**மூளை :** பாதிக்கப்படுவதால் மூளை மழுங்கு நோய், வலிப்பு நோய், சிறுமூளை பாதித்து நடக்க முடியாமை, ஞாபக சக்தி குறைவு ஏற்படுகிறது.

**இதயம் :** இதயம் விரிவடைந்து மாரடைப்பு நோய் வருகிறது. அதிக இரத்த அழுத்தம், இதயத்துடிப்பில் மாற்றம் ஏற்பட்டு உயிரிழப்பு உண்டாகிறது.

**கல்லீரல் :** முதலில் வீங்கியும் பிறகு சுருங்கியும் போய் செயலிழந்து விடுகிறது.

**கணையம் :** பாதிக்கப்பட்டு, செரிமானக் கோளாறு, சர்க்கரை நோய் வருகிறது. சிலருக்கு இவ்வுறுப்பு திடீரென செயலிழந்து உயிரிழப்பு ஏற்படுகிறது.

**நுரையீரல் :** டிபி மற்றும் நோய்க்கிருமிகளால் பாதிக்கப்படுகிறது.

**உணவுக்குழாய் :** இதில் புண் ஏற்பட்டு ரத்தக்குழாய் விரிவடைந்து இரத்த வாந்தி ஏற்பட்டு உயிரிழப்பு உண்டாகிறது.

**உணவுப்பை :** புண் மற்றும் துளை ஏற்பட்டு ரத்தத்வாந்தி மற்றும் உயிரிழப்பு ஏற்படுகிறது.

**ஆண்மைத் தன்மை :** விரை சுருங்கி விடுகிறது. ஆண்மைத் தன்மை குறைகிறது. மலட்டுத் தன்மை ஏற்படுகிறது.

**நரம்பு மண்டலம் :** நரம்புகள் பாதிக்கப்பட்டு, தொடு உணர்ச்சி குறைந்து, உடல் மற்றும் கால்களில் எரிச்சல் தன்மை உண்டாகிறது.

**நோய் எதிர்ப்பு சக்தி :** இது குறைந்து டிபி, பாக்டிரியா, வைரஸ் கிருமிகள் எளிதில் தாக்கி உயிருக்கு பங்கம் ஏற்படுகிறது.

**உணவுப் பாதை :** இது முற்றிலும் பாதிக்கப்பட்டு செரிமானக் கோளாறு ஏற்படுகிறது.

**தூக்கம் :** தூக்கமின்மை ஏற்படுகிறது.

**புற்று நோய் :** தலை. கழுத்து, உணவுப் பாதை, ஈரல், நுரையீரல் போன்ற உறுப்புகளில் புற்றுநோய் ஏற்படுகிறது.

**கர்ப்பிணி பெண்களுக்கு:** கருச்சிதைவு ஏற்படுகிறது. மேலும், வயிற்றில் வளரும் குழந்தைகளுக்கு, உடல் மற்றும் மனதில் குறைபாடு ஏற்படுகிறது.

2. **மனநல பாதிப்பு :–** மனதின் இருப்பிடமான மூளை பாதிப்படைவதால், பலவித மன நோய்கள் ஏற்படுகின்றன. (மனச்சோர்வு, சந்தேக நோய், மனச்சிதைவு நோய், மூளை மழுங்குநோய்)

3. **குடும்ப நல பாதிப்பு :** குணாதிசிய மாற்றங்களாலும், மனநல பாதிப்புகளாலும், ஆண்மைக் குறைவு ஏற்படுவதாலும் கணவன், மனைவி, குழந்தைகளின் உறவு முறைகளில் விரிசல் ஏற்படுகின்றன,

4. **தொழில் பாதிப்பு :** திறமைக் குறைதல், வேலைக்குச் செல்லாமை, மற்றும் மனநல பாதிப்பால் தொழில் ரீதியாக மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன.

5. **பொருளாதார பாதிப்பு :–** தொழிலில் பாதிப்பு ஏற்படும் போது வருமானக் குறைவால் பொருளாதார பாதிப்பு உண்டாகிறது.

6. **சமூக நல பாதிப்பு : –** மனநல பாதிப்பாலும், குணாதிய மாற்றங் களாலும், குடும்ப பிரச்சனைகளாலும், பொருளாதார பாதிப்பு களாலும், சமூகத்தில் உள்ள மதிப்பு, மரியாதை, அந்தஸ்து பாதிப்படைகிறது.

7. **சட்டப் பிரச்சனை :–** குடி மற்றும் போதைப்பொருட்களின் தாக்குதலால் குற்றங்கள் புரியும் மனநிலை ஏற்பட்டு சட்டப் பிரச்சனை ஏற்படுகிறது. மேலும், போதைப் பொருட்களின் உந்துதலால் விபத்துக்களும், உயிரிழப்பும் ஏற்பட்டு, சட்டப் பிரச்சனை ஏற்படுகிறது.